# சுடர் ஒளி

THE SUDAR OLI

சுடர் ஒளி

13.10.2020 செவ்வாய்க்கிழமை


# நாடு ஒருபோதும் முடக்கப்படாது! மக்களே பீதியடைய வேண்டாம்!!

## மீண்டும் அறிவித்தது அரசு

கொழும்பு, ஒக். 13
இலங்கை மீண்டும் கொரோனாவின் தாக்கத்தை எதிர்கொண்டுள்ளது. எனினும், நாட்டை முழுமையாக முடக்காமல் ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர எதிர்பார்க்கின்றோம் என்று அரசு மீண்டும் அறிவித்துள்ளது. அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கின்ற ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் இன்று காலை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சரவை இணைப் பேச்சாளராகிய அமைச்சர் ரமேஷ் பத்திரண

2

## புதினம் தெரியுமோ?

யாழ்ப்பாணம் கச்சேரியில தனக்குச் சரிவராத ஆக்களையெல்லாம் களையெடுக்கிற வேலையில அங்கத்தை பெரியவர் இறங்கியிருக்கிறாராம். இப்ப பெரியவர் முழுக்க ஒரு நிழல் நிகழ்ச்சி நிரலில தான் பொம்மை மாதிரி இயங்குறார் எண்டது எல்லாருக்கும் தெரியும். அதால அவர் எடுக்கிற முடிவுகள் எல்லாம் எங்கேயோ எடுக்கப்பட்டு அவர் மூலமாச் செய்விக்கப்படுது எண்டதுதான் உண்மை. இப்ப தனக்கு குடைச்சல் தாற அதிகாரிகளில 5 வருசத்தை தாண்டியும் கச்சேரில வேலை

2




## ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் சுயாதீன விசாரணைக்கு உத்தரவு!

கொழும்பு, ஒக். 13
முல்லைத்தீவில் ஊடகவியலாளர்கள் இருவர் தாக்கப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் பக்கசார்பற்ற சுயாதீன விசாரணை நடத்தப்படும் என்று ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு இன்று முற்பகல் அரச தகவலை திணைக்களத்தில் நடைபெற்றது.

2

# '20'ஐ கைவிடுங்கள்

## கத்தோலிக்க ஆயர்கள் பேரவையும் வலியுறுத்து



கொழும்பு, ஒக்ரோபர் 13
அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்ட வரைவை கைவிடுமாறு கத்தோலிக்க ஆயர் பேரவை, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

# ரிஷாத்தை கைது செய்க


## சட்டமா அதிபர் பணிப்பு

### பிடியாணை பிறப்பிக்க நீதிமன்றம் மறுப்பு



கொழும்பு, ஒக். 13
நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் உள்ளிட்ட மூவரை கைது செய்ய பிடியாணை பிறப்பிக்குமாறு குற்றப் புலனாய்வு பிரிவினர் விடுத்த வேண்டுகோளை கோட்டை நீதிவான் நிராகரித்துள்ளார். அவர்களை

2



## 'சுனாமி' பீதி: முடங்கியது பேருவளை

### வெறிச்சோடின வீதிகள்

கொழும்பு, ஒக். 13
களுத்துறை மாவட்டம், பேருவளைப் பிரதேசத்தில் சுனாமி வதந்தியால் மக்கள் மத்தியில் பீதி ஏற்பட்டுள்ளது. கடைகள் மூடப்பட்டன.

2

# மணிவண்ணனின் வழக்கு வாபஸ்

யாழ்ப்பாணம், ஒக். 13
அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸால் யாழ்ப்பாண மாநகர சபைக்கு நியமன உறுப்பினராக அனுப்பப்பட்ட சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனை அந்தப் பதவியிலிருந்து நீக்க கட்டளையிடுமாறு கோரி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனு இன்று மீளப்பெறப்பட்டது. 'பிரதிவாதி விஸ்வலிங்கம் மணிவண்ணன், மாநகர சபை உறுப்புரிமை வழங்கிய கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். அதனால் இந்த மனுவின் ஊடாக நீதிமன்றின் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. வழக்குச் செலவு இன்றி மனுவை மீளப்பெற

2

# 49 பேருக்கு இன்று தொற்று

கொழும்பு, ஒக். 13
நாட்டில் மேலும் 49 பேருக்கு கொரோனா உறுதிசெய்யப்பட்டுள்ளது என இராணுவத்தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களில் 32

2

## சென். பற்றிக்ஸ் கல்லூரி அருகில் குண்டுகள் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 13
யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பின்பாகவுள்ள குளத்துக்கு அண்மையிலிருந்து ஆர்.டி.எக்ஸ் மற்றும் ரி.என்.ரி மருந்து கலக்கப்பட்ட 4 கிலோ வெடி

2

# '20'ஐ....

20 ஐ முன்நோக்கி கொண்டுசெல்லாமல், புதிய அரசமைப்பை இயற்றும் பணிக்கு முன்னுரிமை வழங்கி செயற்படுமாறும் மேற்படி பேரவை இன்று வெளியிட்டுள்ள விசேட ஊடக அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளது.
மக்களின் இறைமை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதால் 20 ஆவது திருத்தச்சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னர் அதுபற்றி ஆழமாக ஆராயுமாறும், அனைத்து அதிகாரங்களும் தனிநபர் வசம் செல்வது ஜனநாயக நாட்டுக்கு பொருத்தமற்ற விடயமாகவே அமையும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
அத்துடன், நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை என்பது மக்களின் உண்மையான நிலைப்பாட்டை பிரதிபலிக்கவில்லை. எனவே, புதிய அரசமைப்பை இயற்றும் பணிக்கு முன்னுரிமை வழங்குமாறு மேற்படி அறிக்கை ஊடாக கோரப்பட்டுள்ளது.
அதேவேளை, அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவு அவசியமற்றது என இரண்டு பௌத்த பீடங்கள் நேற்று விசேட கூட்டறிக்கையொன்றின் ஊடாக அறிவித்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ,5,44)

# ஊடகவியலாளர்கள்....

இதன்போது முல்லைத்தீவில் நேற்று ஊடகவியலாளர்கள் இருவர் தாக்கப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். 'பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தி இது தொடர்பில் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு பொலிஸாரிடம் கோரியுள்ளோம்' என்றும் அமைச்சர் கூறினார். (ஒ,44)

# நாடு ஒருபோதும்...

மேற்கண்டவாறு கூறினார்.
எந்த விதத்திலும் மக்கள் பீதியடையத் தேவையில்லை என்று குறிப்பிட்ட அவர், சுகாதார நெறிமுறைகளை மக்கள் பின்பற்றி, கொரோனாவைக் கட்டுப்படுத்தும் அரசின் முயற்சிக்கு ஆதரவளியுங்கள் என்றும் கேட்டுக்கொண்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
நாட்டில் ஏற்பட்டிருக்கும் நிலைமையை அரசு நன்கு அறிந்துதான் வைத்திருக்கின்றது. இதற்கு முன்னர் நாட்டில் ஏற்பட்ட நிலைமையில் 60 இலட்சம் குடும்பங்களுக்கு 60 பில்லியன் ரூபா வரையிலான உதவித் தொகையை நெருக்கடியான தருணத்திலும் அரசு வழங்கியது. இந்தச் சந்தர்ப்பத்திலும் நெருக்கடியான பிரதேசங்களில் நிலைமைகளை வழமைக்குக் கொண்டுவரவே முயற்சிக்கின்றோம். அதனால்தான் ஓரிரு நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்ட பிரதேசங்களிலும் ஊரடங்குச் சட்டத்தை தளர்த்தும்படி ஜனாதிபதி பணித்திருந்தார். மக்கள் எதிர்கொண்டிருக்கும் நெருக்கடிக்கு அரசு என்கின்ற வகையில் வருந்துகின்றோம். அதேபோல மூடப்பட்டிருக்கும் வர்த்தக நிலையங்கள், நிறுவனங்களை மீண்டும் திறப்பதற்கும் எதிர்பார்க்கின்றோம், என்றார். (ஒ,22)

## புதினம் தெரியுமோ?

**செய்யிறவையை எல்லாம் இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்கச் சொல்லி நச்சரிச்சபடியே இருக்கிறாராம். அவையை தூக்கிட்டு, அந்த இடங்களுக்கு தங்களுக்கு வசதியான ஆக்களை மாத்துறதுதான் அவையின்ர பிளான். சில அதிகாரிகள் இவரின்ர கட்டுப்பாட்டுக்கு கீழ இல்லை. அவைக்கு இடமாற்றம் குடுக்க வேண்டியது அந்தந்த அமைச்சு. ஆனால் அவையையும் இடமாற்றத்துக்கு போடச் சொல்லுறாராம். இவரின்ர ஆய்க்கினையால இப்ப முக்கியமான, ஆளுமையான அதிகாரிகள் வேற இடங்களுக்கு போகத் தொடங்கிட்டினம்.**
**இனி தனக்கு ஏத்த ஆக்களை வைச்சு புலிகேசி மாதிரி, ஒரு சிரிப்பு ராஜ்ஜியத்தை தான் நடத்தப்போறார் போல.**

பட்சி

# பேருவளையில்....

வீதிகள் வெறிச்சோடின. கடற்கரைப் பகுதியை அண்மித்த வீடுகளிலிருந்தும் மக்கள் பொருள்களை ஏற்றி பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர். சுனாமி ஒத்திகை தொடர்பான இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் ஊடக அறிக்கை திரிவுபடுத்தப்பட்டமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,22)

# மணிவண்ணனின்....

மனுதாரர் முடிவு செய்துள்ளார்' என்று மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மன்றுரைத்தார்.
'மணிவண்ணன் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட விடயத்தை நான் அறியவில்லை. ஆனால் மனுதாரரின் விண்ணப்பத்துக்கு ஆட்சேபனையில்லை' என்று மணிவண்ணன் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மன்றுரைத்தார்.
மனுதாரரின் விண்ணப்பத்தை மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு அனுமதியளித்தது.
யாழ்ப்பாண மாநகர சபை எல்லையில் வதியும் வாக்காளர் ஒருவரின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.
யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் நிரந்தரமாக வதியாத ஒருவர் உறுப்பினராக தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டமை உள்ளூராட்சி தேர்தல் விதியை மீறும் செயல் என மனுதாரர் மனுவில் சுட்டிக்காட்டியிருந்தார். எனவே அகில இலங்கை தமிழ் காங்கிரஸால் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் வி.மணிவண்ணனை அந்தப் பதவியிலிருந்து நீக்கி கட்டளையிட வேண்டும் என மனுதாரர் கோரியிருந்தார்.
மனு தாரர் கோரிய இடைக்கால நிவாரணங்களில் ஒன்றான, மனு மீதான விசாரணை நிறைவடையும்வரை யாழ்ப்பாண மாநகர சபை அமர்வுகளில் பங்கேற்க உறுப்பினர் வி.மணிவண்ணனுக்கு தடை உத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்றம் 2018ஆம் ஆண்டு ஒகஸ்டில் வழங்கியது.
இந்த மனு இன்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் முன் வந்த போது அதனை மனுதாரர் மீளப்பெற்றார்.
இதேவேளை மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய இடைக்கால கட்டளையை எதிர்த்து, உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு ஒன்றை மணிவண்ணன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆலோசனைக்கு அமைய மேற்கொண்டிருந்தார். அந்த மேன்முறையீட்டு மனு மீதான விசாரணையின் போது உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றில் இடம்பெறும் வழக்கை இழுத்தடிக்காமல் தீர்வைக் கண்ட பின்னர், தீர்ப்பில் திருப்தி இல்லை என்றால் மேன்முறையீட்டு வழக்கை நடத்தலாம் எனத் தெரிவித்து திகதியிடாமல் அந்த வழக்கை ஒத்தி வைத்தமை குறிப்பிடத்தக்கது.
இதேவேளை, யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர் பதவியிலிருந்து வி.மணிவண்ணனை, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் இதுவரை நீக்கவில்லை என்று யாழ்ப்பாண மாவட்ட தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் உறுதி செய்தன. இதனால் மாநகர சபையின் அடுத்த அமர்வில் மணிவண்ணன் பங்கேற்கக்

# ரிஷாத்தை...

கைது செய்ய பிடியாணை அவசியமற்றதென நீதிவான் அறிவித்தார்.
ரிஷாத் உள்ளிட்ட மூவரைக் கைது செய்ய நீதிமன்ற பிடியாணையை பெறும்படி சட்டமா அதிபர், பதில் பொலிஸ்மா அதிபரை அறிவுறுத்தியிருந்தார்.
2019ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின்போது புத்தளத்தில் இடம்பெயர்ந்த வசிப்பவர்கள் வாக்களிக்க இ.போ.ச பேருந்தில் அழைத்து செல்லப்பட்டனர் எனவும், இதற்காக பொதுநிதி விரயம் செய்யப்பட்டதாகவும், தேர்தல் சட்டவிதியை மீறப்பட்டுள்ளது எனவும் ரிசாத் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.
இதேவேளை உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகத்தில் ரிஷாத் பதியுதீனின் சகோதரர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த வாரம் அவர் விடுதலை செய்யப்பட்டிருந்தார். அவரை மீளவும் கைது செய்யவேண்டும் என்று ஆளும் கட்சியின் 100 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5,22)

# சென். பற்றிக்ஸ் கல்லூரி....


மருந்து பொதி மற்றும் 10 ரெனரேட்டர்கள் என்பன விசேட அதிரடிப்படையினரால் இன்று மீட்கப்பட்டுள்ளன.
யாழ்ப்பாணம் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையிலேயே வெடிமருந்துகள் மீட்கப்பட்டுள்ளன. (ஒ,20)

# இரண்டு பௌத்தபீடங்களின் தீர்மானம் வரவேற்கத்தக்கது

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 13
நாட்டுக்கு எதிரான தீர்மானங்கள் முன்வைக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் எல்லாம் அவற்றை மீளப்பெறவைப்பதற்கான நடவடிக்கைகளை தேரர்கள் முன்னெடுத்திருந்தனர். அவ்வாறான தொரு சூழ்நிலை மீண்டும் உருவாகியுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டவரைவு தற்போது அவசியமில்லை எனவும், ஜனநாயகத்தையும், சட்டஆட்சியையும் உறுதிப்படுத்தும் விதத்திலான புதிய அரசமைப்பே இயற்றப்படவேண்டும் என வலியுறுத்தி அமரபுர, ராமன்ய ஆகிய பௌத்த பீடங்களின் மகா சபை வெளியிட்டுள்ள கூட்டறிக்கையை வரவேற்று ஐக்கிய மக்கள் சக்தியால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,44)

# 49...



பேர் மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிபவர்கள் எனவும் ஏனைய 17 பேரும் குறித்த தொழிலாளர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதுவரை மினுவங்கொட கொவிட்-19 தொற்று கொத்தணியில் பதிவான மொத்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 446 ஆக அதிகரித்துள்ளது.
நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை நான்காயிரத்து 893ஆகப் பதிவாகியுள்ளது. கொரோனா தொற்றிலிருந்து இதுவரை மூவாயிரத்து 328 பேர் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ள நிலையில் இன்னும் ஆயிரத்து 552 பேர் தொடர்ந்தும் சிகிச்சைபெற்று வருகின்றனர். (ஒ,இ)

## வாக்காளர் பெயர்ப் பட்டியல்

# பதியத் தவறியவர்களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம்

### உதவித் தேர்தல்கள் ஆணையாளர் கி.அமல்ராஜ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 13
2020ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இதுவரையில் வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பெயர்களைப் பதிவு செய்வதற்கான பி.சி. படிவங்கள் கிடைக்கப் பெறாதவர்கள், தமது கிராம அலுவலர்களையோ அல்லது யாழ்ப்பாண மாவட்டச் செயலக தேர்தல்கள் திணைக்களத்தையோ எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் அணுகுமாறு யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் கி.அமல்ராஜ் தெரிவித்தார்.

வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் பணிகள் தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பெயர்களை இணைத்துக் கொள்வதற்கான பி.சி. படிவங்கள் கிராம அலுவலர்கள் ஊடாக மக்களுக்கு வீடு வீடாக வழங்கப்பட்டுள்ளன. அவற்றை கிராம அலுவலர்கள் மீளப் பெற்றுள்ளனர். கிராம அலுவலர்களிடமிருந்து மாவட்டச் செயலகத்தில் பொறுப்பேற்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இதுவரையில் பி.சி. படிவத்தை நிரப்பிக் கொடுக்காதவர்கள், பி.சி. படிவம் கிடைக்காதவர்கள் தமது பெயர்களை வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பதிவு செய்வதற்கு எதிர்வரும் 23ஆம் திகதி வரையில் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. கிராம அலுவலரையோ அல்லது மாவட்டச் செயலக தேர்தல்கள்திணைக்களத்தையோ அணுகுவதன் ஊடாக தமது பெயர்களைப் பதிவுசெய்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கும், என்றார். (ஓ,5)

# 20ஆம் திகதிக்கு பின்னரே '20' குறித்து இறுதி முடிவு!



கொழும்பு, ஒக். 13
பௌத்த பீடங்களின் கோரிக்கை உட்பட "அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்ட வரைவு தொடர்பான அடுத்தக்கட்ட நகர்வுகள் 20ஆம் திகதிக்கு பின்னரே முன்னெடுக்கப்படும்" என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு இன்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவு தொடர்பில் இலங்கை அமரபுர ராமன்ய சாமக்ரி சங்க சபை விடுத்துள்ள கூட்டறிக்கை தொடர்பில் அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு அவர் நேரடி பதிலை வழங்கவில்லை. மழுப்பல் போக்கில் பதிலளித்தார்.

'அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்ட வரைவை சவாலுக்குட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை பரிசீலனை செய்த உயர்நீதிமன்றம் தனது சட்டவியாக்கியானத்தை சபாநாயகருக்கு அனுப்பிவைத்துள்ளது. உயர்நீதிமன்றின் சட்டவியாக்கியானத்தை சபாநாயகர் எதிர்வரும் 20 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அறிவிப்பார்.

சபாநாயகர் இவ்வாறு அறிவித்த பின்னரே 20 தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்' என்று அமைச்சர் கெஹலிய குறிப்பிட்டார். (ஓ,44)

# புலம்பெயர் தமிழர்களால் தனக்கு பெரும் ஆபத்தாம்!

### *புலம்புகிறார் சர்ச்சைக்குரிய தேரர் மங்களராமய சுமணரத்ன*



புலம்பெயர் தமிழர்களால் எனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருக்கிறேன். எனக்கு வழங்கப்பட்ட பொலிஸ் பாதுகாப்பையும் அரசு விலக்கி விட்டது. மட்டக்களப்பிலுள்ள சிங்களவர்களிற்காக குரல் கொடுப்பதற்கு யாருமில்லை. நான் மட்டுமே சிங்கள தொல்லியல் சின்னங்களை பாதுகாக்கிறேன். கடமையைச் செய்ய வேண்டிய அரச அதிகாரிகள் அதைச் செய்யவில்லை. மாறாக என் மீது 80 வழக்குகள் தாக்கல் செய்துள்ளனர் என்று மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி சுமணரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பில் வெடிகுண்டுகள் வெடித்துக் கொண்டிருந்த போது இங்கு வந்தேன். இங்குள்ள சிங்கள மக்களுக்;காக மங்களராமய வழிபாட்டுத்தலத்தை உருவாக்கினேன். கடுமையாக துன்பப்பட்ட அப்பாவி சிங்கள மக்களின் பிரச்சினை களுக்கு விடை காண நான் மட்டக்களப்புக்குச் செல்ல வேண்டியிருந்தது. இந்த மக்களின் பிரச்சினைகளை நான் தீர்க்க முயன்றதால் அதிகாரிகளால் விமர்சிக்கப் பட வேண்டியிருந்தது. ஏழைகளுக்காக சுமார் நானூறு வீடுகள் கட்டினோம். சிங்களவரிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட சுமார் நூறு ஏக்கர் நிலத்தை மீட்க, பட்டினியால் வாடும் மக்களின் பட்டினியைப் போக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆயிரம் தடைகளுக்கு மத்தியில் சுமார் 200 ஏக்கர் நெல் நிலங்களில் பயிரிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. கால்நடைகள் அவர்களின் பயிர்களை அழித்தபோது பாதிக்கப்பட்டுள்ள சிங்கள மக்கள் சார்பாக பேச யாரும் மட்டக்களப்புக்கு வர வில்லை. அதற்கான குரல் நான்தான்.

நாளுக்கு நாள் தொல்பொருள்கள் புல்டோசரால் அழிக்கப்படுகின்றன. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் விலகிப் போகிறார்கள். நான் அவர்களிடம் பேசும்போது, நான் ஒரு குற்றவாளி என்பதைப்போல உலகுக்குக் காட்டி நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்கிறார்கள். தங்கள் வேலையைச் சரியாகச் செய்யாதவர்கள் அதிலிருந்து தப்பித்துக்கொள்கிறார்கள். இப்போது நான் மக்கள் சார்பாக பேசியுள்ளேன். கிட்டத்தட்ட எண்பது வழக்குகள் என் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தமிழ் புலம்பெயர்ந்தோரிட மிருந்து எனக்கு தொடர்ந்து கொலை அச்சுறுத்தல்கள் வந்துள்ளன. பலர் தொலைபேசியில் அழைத்து மிரட்டினார்கள். கெவிலியமடு நிலத் தகராறு தொடர்பாக ஒரு பொலிஸ் அதிகாரி என்னுடன் நடந்து கொண்டது குறித்து அச்சமடைகிறேன். என்னைக் கொல்ல நடக்கும் சதி குறித்து மங்களகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளேன். முன்னதாக எனது பாதுகாப்புக்காக 4 பொலிஸ் அதிகாரிகள் வழங்கப்பட்டிருந்தனர். மங்களராமய விகாரை வாயில் அருகே இரண்டு பேர் இருந்தனர். இப்போது எனது பாதுகாப்புக்கு வழங்கப்பட்ட நான்கு பொலிஸ் அதிகாரிகளும் அகற்றப்பட்டுள்ளனர். வாயிலுக்கு அருகில் இரண்டு பேர் மட்டுமே உள்ளனர். நான் நகரத்திற்குச் செல்லும்போது, மற்ற விகாரைகளின் வேலைகளைப் பார்க்கச் செல்லும் போது, என் உயிரைப் பணயம் வைக்கிறேன். எனது பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளதால், என் உயிருக்கு ஆபத்தான நிலையில் வாழ்கிறேன், என்றார். (ஓ,இ)

# சுகாதார நெறிமுறைகளை இராஜதந்திரிகள் பின்பற்றுகின்றனர்

### சீனாவுக்காக வக்காலத்து வாங்கும் அமைச்சரவை இணைப்பேச்சாளர்

கொழும்பு, ஒக். 13
இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் கொரோனா வைரஸ் பரவாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதுடன், சுகாதார நெறிமுறைகளை முழுமையாக பின்பற்றியே சந்திப்புகளில் ஈடுபடுகின்றனர். சமூகத்துடன் அவர்களுக்கு தொடர்பு இருக்காது என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு இன்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது, ஒரே நாடு ஒரே சட்டம் என்பதே இந்த அரசின் கொள்கை எனக்கூறப்படுகின்றது. நாட்டு மக்களுக்கு இறுக்கமான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு வலியுறுத்தும் வர்த்தமானி அறிவித்தல் வெளியாகவுள்ளது. ஆனால் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு குறிப்பாக சீனத் தூதுக்குழுவுக்கு சலுகை வழங்கப்படுகின்றது. தனிமைப்படுத்தலுக்குகூட உட்படுத்தப்படுவதில்லையே என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களின் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவே புதிய ஏற்பாடுகள் வரவுள்ளன, மாறாக மக்களை வதைப்பது அதன் நோக்கமல்ல. கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்தும் அதேவேளை இராஜதந்திர நடவடிக்கைகளையும் அவதானமாக கையாளவேண்டும். நாடுகளுக்கிடையிலான நட்புறவு என்பது மிக முக்கியம்.

இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் இராஜதந்திரிகள் அந்நாட்டில் தனிமைப்படுத்தலை மேற்கொள்கின்றனர், 48 மணிநேரத்துக்கு முன்னர் மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையையும் கையளிக்கின்றனர். இலங்கைக்குவந்த பின்னர் இங்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. வருபவர்களுக்கு சமூகத்துடன் தொடர்பு இல்லை, வைரஸ் பரவல் ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்திய பின்னரே வருகின்றனர். வந்தபின்பும் முறையாக செயற்படுகின்றனர், என்றார். (ஓ,44)

# மினுவங்கொட கொத்தணியின் மூன்றாம் மட்டத்தினர் அடையாளம்

கொழும்பு, ஒக்.13

மினுவங்கொட பிரண்டிக்ஸ் கொரோனா கொத்தணியில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி மூன்றாவது மட்டத்தில் இருப்பவர்கள் கண்டறியப்பட்டுள்ளனர் என பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. அந்தச் சங்கத்தின் செயலாளர் மஹேந்திர பாலசூரிய தனியார் ஊடகமொன்றுக்கு இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, வெளிநாடுகளில் இருப்போரை இலங்கைக்கு அழைத்து வரும் செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. (வ-இ)



## 112 பேருக்கு தனிமை நிறைவு

கொழும்பு, ஒக்.13

முப்படையினரின் பராமரிப்பிலுள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தல் செயற்பாட்டை நிறைவுசெய்து 112பேர் வெளியேறவுள்ளனர்.

இதுவரை 51,004 பேர் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து தனிமைப்படுத்தல் நிலையங்களை விட்டு வெளியேறியுள்ளனர் என இராணுவத் தளபதி சவேந்ர சில்வா தெரிவித்துள்ளார்.

தற்போது 93 தனிமைப்படுத்தல் நிலையங்களில் 10,447 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தலில் உள்ளனர். இதற்கிடையில் கட்டார் -டோஹா விலிருந்து வருகை தந்த இருவர் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (வ-இ)

## ட்ரோன் கமராவில் படமெடுத்தவர் கைது

அம்பாறை, ஒக்.13

அம்பாறை, திருக்கோவில் பகுதியில் ட்ரோன் கமராவைப் பயன்படுத்தி புகைப்படம் எடுத்த குற்றச்சாட்டில் ஒருவரை விசேட அதிரடிப் படையினர் கைதுசெய்துள்ளனர். கைதுசெய்யப்பட்டவர் அந்தப் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடையவர் ஆவார்.

நாட்டில் 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் அனுமதியின்றி ட்ரோன் கமராக்களை இயக்குவது தொடர்பில் கடும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## பாக்கு விலை சரிவு

தம்புள்ளை, ஒக்.13

கடந்த நாட்களில் 20 ரூபாக்கு விற்பனை செய்யப்பட்ட பாக்கு ஒன்றின் விலை தற்போது குறைந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. தற்போது சந்தைகளில் 10 தொடக்கம் 15 ரூபா வரையில் பாக்கு விற்பனை செய்யப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது. சீரற்ற வானிலை காரணமாகவே பாக்கின் விலை கடந்த காலங்களில் அதிகரித்து காணப்பட்டது என தம்புள்ளை பொருளாதார மத்திய நிலைய வியாபாரிகள் குறிப்பிடுகின்றனர். (வ-இ)



## போதைப்பொருள் பாவனை: விசேட கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஒக்.13

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத் துவது தொடர்பில், கிளிநொச்சி மக்கள் சிந்தனைக்களத்துக்கும், பொலிஸாருக்கும் இடையே விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்றது.

இந்த விசேட கலந்துரையாடலில் கிளிநொச்சி பொலிஸாரின் விசேட மது ஒழிப்புப் பிரிவு பொலிஸ் அதிகாரி மற்றும் மக்கள் சிந்தனைக்களத்தின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டு அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனை மற்றும் சட்டவிரோத மதுப் பாவனை என்பவற்றை கட்டுப்படுத்தல் தொடர்பில் கலந்துரையாடினர்.

குறிப்பாக பொலிஸாருடன் இணைந்து மக்கள் சிந்தனைக்களம் இவற்றை கட்டுப்படுத்த எதிர்காலத்தில் எந்தவகையான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளத் தயார் நிலையில் இருப்பதாகவும் தெரிவித்தனர். முக்கியமாக மாணவர்கள் பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றியும் ஆராய்ந்துள்ளனர். (ற-214)

## 12 வருடங்களின் பின் சந்தேகநபர் கைது

கொழும்பு, ஒக்.13

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரொருவர் 12 வருடங்களின் பின் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

2008 ஆம் ஆண்டு மாலபே பகுதியில் இடம்பெற்ற முச்சக்கரவண்டி சாரதியொருவரின் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தலங்கம பொலிஸார் தலாஹேன மயான பூமிக்கருகில் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுத்த சோதனை நடவடிக்கைகளிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒரு முச்சக்கர வண்டி சாரதி என பொலிஸார் குறிப்பிட்டனர். (வ-இ)

## சைக்கிள் திருத்தகம் விசமிகளால் எரிப்பு

வவுனியா, ஒக்.13

வவுனியா பூந்தோட்டம் சாந்தசோலை உப வீதியில் அமைந்துள்ள சைக்கிள் திருத்தகத்தை அடையாளம் தெரியாத விசமிகள் இன்று அதிகாலை தீயிட்டு எரித்துள்ளனர்.

இந்த வர்த்தக நிலையம் தீயில் எரிவதை அவதானித்த அயலவர்கள் கடை உரிமையாளருக்கு தகவல் தெரிவித்ததுடன், நகரசபையின் தீயணைப்பு வாகனத்துக்கும் தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்துக்குச் சென்ற தீயணைப்பு பிரிவினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இந்த தீ விபத்தால் வியாபார நிலையத்திலிருந்த அனைத்துப் பொருள்களும் எரிந்துள்ளன.

சம்பவ இடத்தை பார்வையிட்ட வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (ற-110)



## பொலிஸாரால் உலருணவுப் பொதிகள்



வவுனியா,ஒக்.13

வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்தின் பொதுமக்கள் நல்லுறவு பிரிவு பொலிஸாரால் ஐந்து கிராம அலுவலர் பிரிவை உள்ளடக்கிய வறுமைக்கோட்டிற்குட்பட்ட 5 குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் இன்று காலை வழங்கப்பட்டன.

வவுனியா தலைமை பொலிஸ் நிலைய வளாகத்தில் அதன் பொறுப்பதிகாரி மானவடு தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், பொலிஸ் உத்தியோகத்தர்கள், சமூக ஆர்வலர்களான சந்திரகுமார் கண்ணன், தமிழ்த்திரு மாதவன்,ஊடகவியலாளர் ந.கபில்நாத் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ந-110)

# உடுவில் சுகாதாரப் பிரிவில் டெங்குத் தாக்கம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.13

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் இருவர் டெங்கு நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் கொரோனாத் தாக்கத்தின் மத்தியிலும் டெங்கின் தாக்கம் மிக நீண்ட காலமாக இல்லாது இருந்த நிலையில், அண்மையில் பெய்த மழையினை அடுத்து இந்த வாரத்தில் இச் சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் டெங்கு நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளனர்.

குப்பிளான் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய ஆண் மற்றும் சங்குவேலி தெற்கு பகுதியைச் சேர்ந்த ஆண் என்போரே டெங்குத் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-39)



# புங்குடுதீவு மக்களுக்கு நிவாரணப் பொருள்கள்

வவுனியா, ஒக்.13

கொவிட்-19 தொற்றுக் காரணமாக முடக்கப்பட்டிருந்த வேலணை பிரதேச செயலகத்திற்குட்பட்ட புங்குடுதீவு பகுதியைச் சேர்ந்த 110 குடும்பங்களுக்கு, அத்தியாவசிய பொருள்கள் அடங்கிய நிவாரணப் பொதிகள் நேற்றையதினம் வழங்கப்பட்டன.

வேலணை பிரதேச செயலகத்தினரின் வேண்டுகோளுக்கு இணங்க 110 குடும்பங்களுக்குமாக ரூபா 40,000/= பெறுமதியான நிவாரணப் பொருள்கள் இளைஞர் குழுவினால் வேலணை பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டு, அவை குறித்த பகுதிக்கு கிராம சேவையாளர்கள் மூலம் விநியோகிக்கப்பட்டன. (ந-222)

# வெருகல் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

வவுனியா, ஒக்.13

திருகோணமலை மாவட்ட வெருகல் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் நேற்றையதினம் வெருகல் பிரதேச செயலகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைத்தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கபில நுவன் அத்துக்கோரல தலைமையில் நடைபெற்றது.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடைபெற்ற இக் கூட்டத்தில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை, காணி விடயங்கள், யானை வேலி அமைப்பதன் அவசியம், குடிநீர் வசதி உட்பட பல விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இக்கூட்டத்தில் வெருகல் பிரதேச செயலாளர் கே.குணநாதன், திணைக்கள தலைவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ந)




# "குளத்தை கூறுபோடாதே" வவுனியாவில் சுவரொட்டிகள்

வவுனியா, ஒக்.13

வவுனியா குளத்துக்கான மக்கள் செயலணி எனும் பெயரில் வவுனியா குளம் தொடர்பிலான வாசகங்களைக் கொண்ட சுவரொட்டிகள் வவுனியா நகரெங்கும் பரவலாக மக்கள் பார்வைக்கு ஒட்டப்பட்டுள்ளன. பச்சை நிறத்தில் அச்சிடப்பட்டு தமிழ், சிங்கள மொழிகளில் இந்தச் சுவரொட்டிகள் காணப்படுகின்றன.

இந்தச் சுவரொட்டிகளில், வவுனியா நகர சபையே! வவுனியா குளத்தை கூறுபோட்டு விற்காதே, நிலத்தடி நீருக்கும் நெல் உற்பத்திக்கும் ஆப்பு வைப்பதா அபிவிருத்தி?, வவுனியா நகர சபையே! குளத்து நீர்ப்பரப்பை மண் கொட்டி நிரப்பாதே, நீர்ப்பாசனத் திணைக்களமே! குளத்தைக் காப்பாற்ற வேண்டியவர்களே ஆக்கிரமிப்புக்குத் துணை போவதா? போன்ற வாசகங்கள் வவுனியா நகரெங்கும் ஒட்டப்பட்டுள்ளன. காலம் கடந்து எழுப்பப்படும் கோஷங்கள் இவை என்று குளத்தை அண்டிய பூந்தோட்டப் பகுதி நபரொருவர் தெரிவித்துள்ளார். (ந-30)

# ஊடகவியலாளரைத் தாக்கிய மூவருக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஒக்.13

வசந்தம் டிவி மற்றும் ஐ.ரி.என். நிறுவனத்தின் பிராந்திய ஊடகவியலாளரைத் தாக்கிய மூவரை இம்மாதம் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்ற பதில் நீதிவான் முகம்மட் பரூஸ் நேற்று உத்தரவிட்டார்.

அக்போபுர, சீனி ஆலை பகுதியைச் சேர்ந்த 24, 28 மற்றும் 20 வயதுடைய மூவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அக்போபுர பகுதியில் விபத்தொன்று ஏற்பட்டதை அறிந்து செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளரை மூவர் இணைந்து தாக்கியதோடு அவரின் ஒலிப்பதிவு கருவியையும் அபகரித்துச் சென்றுள்ளனர் என பிராந்திய ஊடகவியலாளரினால் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் மூவரைக் கைதுசெய்து கந்தளாய் நீதிமன்ற பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்போபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந,இ)

# ருகுணு பல்கலை மாணவியின் தந்தைக்கு கொரோனா உறுதி

மாத்தறை, ஒக்.13

மாத்தறை வெல்லமடம பிரதேசத்தில் அமைந்துள்ள ருகுணு பல்கலைக்கழகத்தின் முதலாம் வருட மாணவி ஒருவரின் தந்தைக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதையடுத்து குபுகம டெவுன்டரவில் அமைந்துள்ள விடுதியில் தங்கியிருந்த அந்த மாணவியும் அவருடன் அறையில் தங்கியிருந்த மற்றொரு மாணவியும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மாணவியின் தந்தை கன்டனவில் அமைந்துள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரிகின்றார். அவர் மகளைச் சந்திப்பதற்கு செப்ரெம்பர் 27ஆம் திகதி விடுதிக்குச் சென்றுள்ளார் எனவும் தெரியவருகிறது.

இதேவேளை கடந்த 3ஆம் திகதி மாணவியின் தாயார் மகளைச் சந்திப்பதற்கு விடுதிக்கு சென்றிருந்த போதும் அவருக்குத் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மாணவிகளுக்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் இன்று மேற்கொள்ளப்படவுள்ளன. (வ-இ)



# சுகாதார வழிமுறைகளின்றி நடமாடும் யாசகர்கள்

## கொரோனா அச்சத்தில் வர்த்தகர்கள்

வவுனியா நகர் பகுதியில் யாசகர்கள் பலர் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாது நடமாடுவதால் கொவிட் 19 தொற்று ஏற்படும் என்ற அச்சத்தில் வர்த்தகர்கள் உள்ளனர்.

வவுனியா நகரை அண்டிய பகுதிகளில் வெளி மாவட்டங்களில் இருந்து வருகை தந்த யாசகர்கள், வர்த்தகர்கள் மற்றும் நகரப்பகுதிக்கு செல்வோரிடம் யாசகம் கேட்கின்றனர்.

அத்துடன் வவுனியா நகரம் மற்றும் வைரவபுளியங்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களின் முன்னால் இரவு வேளைகளில் உறங்குகின்றனர்.

இதனால் கொரோனாத் தொற்று ஏற்பட்டுவிடும் என அச்ச நிலை ஏற்பட்டுள்ளது என பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் வவுனியா பொலிஸார் ஆகியோருக்கு தெரியப்படுத்தியும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. யாசகர்கள் கடைகளின் முன்னால் தங்குவதால், தாம் தினமும் கடைகளின் முன்னால் கிருமி நீக்கம் செய்ய வேண்டியுள்ளது என வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். (வ-18)

# போலிச் செய்தி பரப்புவோர் மீது சட்ட நடவடிக்கை எடுங்கள்

## சமன் குமார் கோரிக்கை

கொழும்பு, ஒக்.13

சமூக வலைத்தளங்களில் கொரோனா தொடர்பாக போலிச் செய்திகளை பரப்புவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் உப தலைவர் சமன் குமார் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, அரசாங்கம் கொரோனாவைக் கட்டுப்படுத்துதல் மற்றும் தொற்றுக்குள்ளானவர்களைக் கண்டுபிடிப்பதன் வேகம் மிகவும் குறைவாக உள்ளது என சமூக வலைதளங்களிலும் போலிச் செய்திகள் பரவி வருகின்றன. மக்களை அநாவசியமாக குழப்பும் வகையில் போலிச் செய்திகளை பரப்பக்கூடாது. அவ்வாறு செயற்படுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். வைரஸ் தொற்று தொடர்பில் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்க அனைவரும் முன்வர வேண்டும். இது அரசியல் இலாபம் தேடும் நேரமல்ல. எதிர்க்கட்சி என்றாலும் ஆளும் கட்சி என்றாலும் அனைவரும் ஒன்றிணைந்து மக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது. (வ-இ)





# மன்னாரில் தொற்று நீக்கம்

மன்னார், ஒக்.13

மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்று காரணமாக இரண்டு கிராமங்கள் மூடப்பட்ட நிலையில், நேற்று மீண்டும் இந்தக் கிராமங்கள் திறந்து விடப்பட்டன. இந்த நிலையில், மன்னாரின் பல பாகங்களிலும் இன்று காலை 7.30 மணி முதல் கிருமித் தொற்று நீக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது மன்னார் பெரியகடைப் பகுதியில் மூடப்பட்ட வர்த்தக நிலையம், அதனைச் சார்ந்த பகுதிகள், மன்னார் புதிய பேருந்து தரிப்பிடம் மற்றும் பட்டித்தோட்டம் ஆகிய பகுதிகளில் கிருமித் தொற்று நீக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மன்னார் பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் மன்னார் நகரசபை ஆகியன இணைந்து கிருமித் தொற்று நீக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்க, மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.கிருஸாந்தன், மன்னார் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கில்றோய் பீரிஸ் உள்பட விசேட அதிரடிப் படை அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-56)

# அரச, தனியார் ஊழியர்களின் தகவல்களை வழங்கக் கோரிக்கை

கொழும்பு, ஒக்.13



அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் தங்களது ஊழியர்களின் தகவல்களைப் புதுப்பித்து வழங்குமாறு சிரேஷ்ட பிரதி காவல்துறைமா அதிபரும் காவல்துறை ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹன கோரிக்கைவிடுத்துள்ளார்.

மேலும், அடுத்த 3 நாட்களுக்குள் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவல் அதிகரித்துள்ள நிலையில் அவசர தேவைகளைக் கருத்திற்கொண்டு இக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

# பாம்புக்கடிக்கு இலக்கான பெண் மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், ஒக்.13

தனது தோட்டத்தில் கத்தரிக்காய் பறித்துக்கொண்டிருந்தபோது அருகிலுள்ள புல் செடிக்குள் இருந்த பாம்பின் இலக்கான நிலையில் பெண்ணொருவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை மாலை சுன்னாகம் மின்னுற்பத்தி நிலை யத்திற்கு அருகாமை இடம்பெற்றுள்ளது. சீமாட்டி வீதி. ஏழாலை தெற்கைச் சேர்ந்த வரதராசா விஜிதா (வயது 46) என்ற பெண்மணி இவ்வாறு பாம்புக்கடிக்கு இலக்காகி மயக்கமுற்று நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-39)

# வெருகல் ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் நேற்று

திருகோணமலை, ஒக்.13

திருகோணமலை வெருகல் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்றுத் திங்கட்கிழமை பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கபில அத்துக்கொரல தலைமையில் இந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நடைபெற்றது.

பொதுத் தேர்தல் முடிவடைந்து புதிய அரசாங்கம் வந்ததன் பின்னர் நடைபெறும் முதலாவது வெருகல் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இதுவாகும்.

வெருகல் பிரதேச செயலாளர் க.குணநாதன், வெருகல் பிரதேச சபையின் தவிசாளர் க.சுந்தரலிங்கம், அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். இதன்போது வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் பொதுமக்கள் தமது பாரம்பரிய காணிகளில் விவசாய நடவடிக்கை மேற்கொள்ளும் போது வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தடுக்கின்ற விடயம், வெருகல் ஆற்றில் கடல் நீர் கலப்பதால் சோளம், கச்சான் செய்கையாளர்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள், சுகாதார, கல்வி, விவசாய, அபிவிருத்தி விடயங்களில் வெருகல் பிரதேச செயலகப் பிரிவின் நிலை போன்ற பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன. இந்த விடயங்கள் தொடர்பில் கவனம் எடுத்து நடவடிக்கை மேற்கொள்வதாகவும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அத்துக்கொரல மேலும் தெரிவித்தார். (ற-40)



# சம்பிக்கவுக்கு எதிரான வழக்கு: விசாரணைத் திகதி அறிவிப்பு

கொழும்பு, ஒக்.13

முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட 3 பிரதிவாதிகளுக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் சாட்சி விசாரணையை எதிர்வரும் டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி தமித் தொடவத்த இதற்கான உத்தரவை நேற்றுப் பிறப்பித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி இரவு இராஜகிரிய பகுதியில் விபத்தொன்றை ஏற்படுத்தி இளைஞர் ஒருவரைக் காயப்படுத்தியமை தொடர்பில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி சாட்சியம் வழங்குவதற்காக மன்றில் ஆஜராகுமாறு மனுதாரர்களின் 5 சாட்சியாளர்களுக்கும் அறிவித்தல் அனுப்புமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

பாட்டலி சம்பிக்க ரணவக்க செலுத்தினார் எனக் கூறப்படும் ஜீப் வண்டியை அன்றைய தினம் நீதிபதியிடம் முன்னிலைப்படுத்துமாறு, மின்சக்தி அமைச்சின் செயலாளருக்கு இதன்போது உத்தரவிடப்பட்டுள்ளது. (வ-இ)

### டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு

# டெங்கு பரிசோதனைகள் நாளை ஆரம்பம்

சாவகச்சேரி, ஒக்.13

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அதன்படி, நாளை சாவகச்சேரி நகர் பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட சங்கத்தானைப்பிரிவிலும், 15 ஆம் திகதி கொடிகாமம் பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட கொடிகாமம் மத்தி பிரிவிலும், 16 ஆம் திகதி எழுதுமட்டுவாழ் பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட கெற்பேலி பிரிவிலும், 17 ஆம் திகதி சாவகச்சேரி நகர் பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட மீசாலை கிழக்கு மற்றும் மீசாலை மேற்கு ஆகிய பிரிவிலும் டெங்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இப் பிரிவுகளில் உள்ள குடியிருப்புகள், பாடசாலைகள், ஏனைய கல்வி நிறுவனங்கள், அரச, தனியார் நிறுவனங்கள், தொழிற்சாலைகள், நிர்மாணத் தளங்கள், பொது இடங்கள் சமயஸ்தலங்கள் ஆகிய இடங்களில் பிரதேச செயலகத்தினர், சாவகச்சேரி நகரசபை, பிரதேச சபை, பொலிஸார், டெங்கு கட்டுப்பாட்டு உதவியாளர்கள் மற்றும் கிராம மட்ட சுகாதார குழுக்கள் போன்றோர் பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளனர்.



பரிசோதனைக்கு வரும் உத்தியோகத்தர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் அதேவேளையில் தமது காணிகள் மற்றும், குடியிருப்புகளில் காணப்படும் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய நீர் ஏந்து பொருள்களை அப்புறப்படுத்துமறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 18 ஆம் திகதி நாவற்குழி ஐயனார் கோவிலடி, கைதடி நகரம், மட்டுவில் அம்மன் கோவிலடி, சாவகச்சேரி சந்தை, மந்துவில் சின்ன சந்தை, வரணி சந்தை, கொடிகாமம் நகர் மற்றும் சந்தை மிருசுவில் வடக்கு ஆகிய இடங்களில் துப்பரவுப் பணிகள் இடம்பெறுமெனவும் மக்களை சிரமதானத்தில் பங்கு பற்றுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## பரீட்சை எழுதத் தடை; இலவசக் கல்விக்கு முரண்!

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

தரம் 5 இல் கல்வி பயிலும் மாணவியை புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட சம்பவம் இலவச கல்வியினை வழங்கும் நாட்டுக்கு முரணானது என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

நிக்கவெரட்டிய கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலையில் ஐந்தாம் தரத்தில் கல்வி பயிலும் மாணவிக்கு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு குறித்த பாடசாலை அதிபரினால் அனுமதி வழங்கப்படவில்லை.

இச் சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகளை முன்னெடுக்குமாறு உரிய தரப்பினருக்கு பணிப்புரை விடுத்துள்ளேன். எக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு அந்த மாணவி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அதிபர் அனுமதி வழங்க மறுத்துள்ளார் என்பது முதலில் அறியப்பட வேண்டும். விசாரணை களை அடிப்படையாகக் கொண்டு பாரபட்சமின்றிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ந-இ)

## கொரோனா கட்டுப்படுத்தலுக்கு முச்சக்கரவண்டி சாரதிகள் ஆதரவு

கொழும்பு, ஒக்.13

கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு அனைத்து முச்சக்கரவண்டி சாரதிகளும் தமது ஆதரவினை வழங்குவார்கள் என்று அகில இலங்கை முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

முச்சக்கரவண்டி சாரதிகள் அனைவரும் பயணிகள் விவரங்களை பதிவை பதிவுசெய்வார்கள், மேலும் கடுமையான சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றுவார்கள் என்று சங்கத்தின் தலைவர் சுதில் ஜெயருக் சுட்டிக்காட்டியுள்ளார்.

அனைத்து ஓட்டுநர்களும் தங்கள் வாடிக்கையாளர்களுடன் பேசுவதைத் தவிர்ப்பதற்கும், முகக்கவசம் அணியாதவர்கள் வாகனத்திற்குள் நுழைவதைத் தடுப்பதற்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-இ)

# முகக்கவசம் அணியாதோரை மக்கள் எதிர்க்கவேண்டும்

### சுகாதார அமைச்சு வேண்டுகோள்

கொழும்பு, ஒக்.13

பொது இடத்தில் முகக்கவசம் அணியாத எந்தவொரு நபருக்கும் பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பொது இடங்களில் புகைப் பிடிப்பதைத் தடைசெய்தபோது மக்கள் அதற்கு ஆதரவு வழங்கி மேற்கொண்ட செயற்பாடுகளைப் போல இந்த விடயத்திலும் அதிகாரம் செய்யும்படி சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர், மருத்துவர் ஜெயருவன் பண்டார கேட்டுக்கொண்டார்.

குறிப்பாக பாடசாலைகளுக்கு அருகில் தனிநபர்கள் புகைப்பிடிக்கும்போது பெற்றோர்களும் மற்றவர்களும் அடிக்கடி ஆட்சேபனை தெரிவிக்கின்றனர். இதேபோல் யாராவது ஒருவர் பொது இடத்தில் முகக்கவசம் அணியாவிட்டால் பொது மக்கள் கடும் ஆட்சேபனைகளை எழுப்பும் ஒரு கலாசாரத்தை அறிமுகப்படுத்த வேண்டும்.

சில இடங்களில் சமூக இடைவெளியை எங்களால் முழுமையாக செயல்படுத்த முடியாமல் போகலாம், ஆனால் யாராவது முகக்கவசம் அணியவில்லை எனில் நாங்கள் எதிர்க்க வேண்டும் எனக் கோரியுள்ள அவர், வைரஸ் பரவுவதைத் தடுக்க அறிமுகப்படுத்தப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்கள் விரைவில் சட்டமாக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (ந-இ)

## தென்மராட்சியில் டெங்கு பாதிப்பு: 9ஆக உயர்வு

சாவகச்சேரி. ஒக்.13

தென்மராட்சி பிரதேசத்தில் டெங்குவால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை ஒன்பதாக அதிகரித்துள்ளது.

டெங்கு மேலும் அதிகரிக்காமல் இருக்க பிரதேச மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும் என சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் அறிவித்துள்ளனர்.

காணிகள் மற்றும் குடியிருப்புகளில் காணப்படும் டெங்கு நுளம்பு உற்பத்திக்கு ஏதுவாக உள்ள இடங்களைத் துப்பரவு செய்யுமாறும், மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் டெங்குவின் தாக்கத்தால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு மக்கள் கடந்த வருடம் போன்று முழுமையான ஒத்துழைப்பினை வழங்குமாறும் அவர்கள் மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

கடந்த மாதங்களில் மிகக் குறைந்த எண்ணிக்கையினரே தென்மராட்சி பிரதேசத்தில் டெங்குவால் பீடிக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பி டத்தக்கது. (வ-9)

## உரமானிய விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக்.13

இருபாலை தெற்கு கமக்கார அமைப்பின் ஊடாக வழங்கப்படும் உரமானியம் நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் உரும்பிராய் கமநல சேவைகள் நிலையத்தில் விநியோகிக்கப்படவுள்ளது. எனவே உரமானியத்தைப் பெறவரும் விவசாயிகள் தங்களுக்கு வழங்கப்பட்ட டோக்கன், ஏக்கர் வரி கட்டிய பற்றுச்சீட்டு என்பவற்றுடன் வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

உரமானியம் பெறுவதற்கான டோக்கன்கள் கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் அமைந்துள்ள கமக்கார அமைப்பின் தலைவரது இல்லத்தில் வைத்து நாளை புதன்கிழமை வழங்கப்படவுள்ளது என கமக்கார அமைப்பின் செயலாளர் ந.கஜேந்திரகுமார் அறிவித்துள்ளார். இவ்வேளை உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ந)



வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 3,002 உயர்தர மாணவர்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிசெய்யும் முகமாக, சுகாதாரப் பாதுகாப்பு பொருள்கள் அடங்கிய பொதிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. நீதிக்கான மக்கள் அமைப்பு மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இணையம் இணைந்து இந்தப் பொதிகளை வழங்கியுள்ளனர். நீதிக்கான மக்கள் அமைப்பின் திட்ட இணைப்பாளர் வ.ரவிந்திரக்குமாரால், வவுனியா வலயக்கல்விப் பணிப்பாளர் ராதாகிருஸ்ணனிடம் வவுனியா வலயக்கல்வி பணிமனையில் வைத்து ஒப்படைக்கப்பட்டது.(ற-40)

# பாலியல் குற்றங்களுக்கு மரண தண்டனை

## பங்களாதேஷின் அதிரடி அறிவிப்பு




பாலியல் வன்முறை குற்றங்களுக்கு மரண தண்டனையை விதிப்பதற்கு பங்களாதேஸ் தீர்மானித்துள்ளது. அந் நாட்டின் சட்டத்துறை அமைச்சர் அனிசுல் ஹக் இதனை அறிவித்துள்ளார். பங்களாதேஷில் 37வயது பெண்ணொருவர் கூட்டாக பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படும் காணொலி கடந்தவாரம் சமூக ஊடகங்களில் வெளியானது. அதைத் தொடர்ந்து பங்களாதேசில் தொடர்ச்சியாக எதிர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் வழக்குகளை விசாரணைசெய்வதை துரிதப்படுத்த வேண்டும் எனவும் பாலியல் வன்முறை சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் இடம்பெறும் விதத்தில் மாற்றங்கள் அவசியம் எனவும் கோரிக்கை விடுத்தனர். இந் நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. (வ-இ)

6 தொற்றாளர்கள் அடையாளம்;

# 5 நாள்களில் 90 லட்சம் பி.சி.ஆர்

## *சீனா அதிரடித் தீர்மானம்*

*பீஜிங், ஒக்.13*

சீனாவின் கிங்டாவோ பிராந்தியத்தில் 5 நாட்களில் சுமார் 90 லட்சம் பேருக்கான பரிசோதனைகள் முன்னெ டுக்கப் படவுள்ளன என அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.


பிராந்திய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த 6பேருக்கு புதிதாக கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

இந்தநிலையில், பரிசோதனைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் 5 மாவட்டங்கள், மூன்று நாட்களிலும் முழு பிராந்தியமும் 5 நாள்களிலும் பரிசோதனைக்குட்படுத்தப்படுமென கிங்டாவோ மாநகர சுகாதார ஆணைக் குழு தெரிவித்துள்ளது. (வ-இ)

# அகதிகள் படகு கவிழ்ந்து 11 பேர் உயிரிழப்பு

*மாஸ்கோ, ஒக்.13*

புலம்பெயர்ந்தோர் சென்ற படகு ஒன்று துனிஷிய கடற்கரை பகுதி அருகே கவிழ்ந்ததில் குழந்தைகள் உட்பட 11 பேர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளனர். ஆபிரிக்காவைச் சேர்ந்தவர்கள் சென்ற படகொன்றே இவ்வாறு மூழ்கியுள்ளது. இதுபற்றி தகவல் அறிந்ததும் கடலோர காவல் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் நீரில் மூழ்கி உயிரிழந்தவர்களில் 11 பேரின் உடல்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன. அவர்களில் இரு குழந்தைகள் உள்ளடங்குகின்றனர். இது தவிர 7 பேரை மீட்பு குழுவினர் மீட்டுள்ளனர். மேலும் தொடர்ந்து தேடுதல் மற்றும் மீட்புப் பணி நடைபெற்று வருகிறது. (வ-இ)



# பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு அமெரிக்கர் இருவருக்கு அறிவிப்பு

*ஸ்டோக்ஹோம், ஒக்.13*

இந்த ஆண்டுக்கான பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு 2 பேருக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது என தெரிவுக்குழு அறிவித்துள்ளது.

ஏல முறைகள் தொடர்பான பொருளாதார ஆராய்ச்சிக்காக அமெரிக்கப் பொருளாதார நிபுணர்களான பால் மில்க்ரோம், றொபேர்ட் வில்சன் ஆகிய இருவருக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. ஏலக் கோட்பாட்டின் மேம்பாடு மற்றும் ஏலத்துக்கான புதிய வடிவமைப்புகளை இவர்கள் உருவாக்கினர். இது உலகெங்கிலும் உள்ள விற்பனையாளர்கள், வணிகர்கள் மற்றும் வரி செலுத்துவோருக்குப் பயன்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)




# அரிய வகை வைரம் ஏலத்தில்

உலகின் மிக அரிதான பிங்க் நிற வைரம் ரஷ்யாவில் கிடைத்துள்ளது. 'தி ஸ்பிரிட் ஆப் தி ரோஸ்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த ஓவல் வடிவ வைரம் இதுவரை ரஷ்ய சுரங்கத்தில் கண்டு பிடிக்கப்பட்ட வைரங்களிலேயே மிகப் பெரிய வைரம் என்று கூறப்படுகிறது.

இந்த பிங் நிற வைரங்கள் கிடைப்பது மிகவும் அரிது.

இது தான் ரஷ்யாவின் மிகப் பெரிய பிங்க் வைரம்'.

14.83 கரட் எடை கொண்ட இந்த வைரம் ஜெனிவாவில் எதிர்வரும் நவம்பர் 11ஆம் திகதி ஏலத்துக்கு வருகிறது.



# ட்ரம்பால் கொரோனா பரவாதாம்

## வெள்ளை மாளிகை தலைமை மருத்துவர் தகவல்

*வொஷிங்டன், ஒக்.13*

டொனால்ட் ட்ரம்ப் மூலம் கொரோனா வைரஸ் பரவும் அபாயம் இல்லை என்று வெள்ளை மாளிகையின் தலைமை மருத்துவர் சீன் கான்லி தெரிவித்துள்ளார்.

டிரம்ப் கொரோனாத் தொற்றில் இருந்து முழுமையாக குணமடைந்தாரா என்பது உறுதி செய்யப்படாத நிலையில் வெள்ளை மாளிகையில் பொது நிகழ்ச்சியொன்றில் அவர் கலந்து கொண்டார். இதற்கு ஜனநாயக கட்சியினர் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் விதமாக தலைமை மருத்துவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையத்தின் விதிமுறைப்படி ஜனாதிபதி டிரம்ப் தனிமைப்படுத்தலை பாதுகாப்பாக நிறைவு செய்தார் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். அவருக்கு நடத்தப்பட்ட தொடர்ச்சியான சோதனைகள் வைரஸ் சுமைகள் குறைந்ததை நிரூபித்துள்ளன. இதன் மூலம் டிரம்பிடமிருந்து மற்றவர்களுக்கு கொரோனா பரவும் அபாயம் இல்லை என்பது உறுதி செய்யப்படுகிறது எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)